*12*

# "நீங்கள் கர்த்தருடைய சேனையில் இருக்கிறீர்கள்!"

## (எபேசியர் 6:10–20)

என்னுடைய பதினெட்டாவது பிறந்த நாளை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். அந்த நாளில் தான் நான் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சேவை தேர்வு அலுவலகம் இருக்கும் அலபாமாவிலுள்ள ஹண்ட்ஸ்வில்லேவுக்குச் சென்றேன். அந்நாளில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவ படையில் சேவை புரியும் இளைஞர்களுக்கான செயல்முறை தெரிவுக்கு பதிவு செய்யப்பட்டேன். எனது பதிவு விபரங்களடங்கிய வரைவு அட்டைகளை இன்னும் வைத்துள்ளேன், அதிலே என்னுடைய பதிவைப் பற்றிய விளக்கம் உள்ளன. வியட்நாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, சில அமெரிக்கர்கள் அவர்களுடைய பதிவு அட்டைகளை அடையாளமாக வைத்துக் கொண்டு அரசின் சட்டங்களை எதிர்த்து போராட பயன்படுத்தி இளைஞர்களை கட்டாயப் படுத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சேவை ஆணையத்தின் மூலம் ஆள் சேர்ப்பதை கண்டித்தனர். ஒரு நாட்டின் குடிமகன் அந்நாட்டின் சலுகைகளை அனுபவிப்பதால், மேற்குறித்த எதிர்ப்பு போராட்டத்தை செய்தவர்கள் துரோகிகளாகக் கருதப்பட்டனர். சலுகைகளையும் ஆதாயங்களையும் அனுபவித்துக் கொண்டு சேவை செய்யவும் நாட்டையும் இந்த சலுகைகளையும் பாதுகாக்கவும் விருப்பமில்லாமல் இருப்பது சுயநலம்.

வரைவு (பதிவு) அட்டை செயல்முறை மூலம் யுத்த வீரர்களை ஒருவருடைய நாட்டுப் பாதுகாப்புக்காக சேர்ப்பது புராதன மற்றும் வரலாற்று செயல்கள். இப்படிப்பட்ட செயல்முறைகள் மூலம் பெரும்பாலான நாடுகள் அவர்களுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு தேவைப்பட்டது. இஸ்ரவேல் தேசத்தில் கூட "பராக்கிரம சாலிகள்" யுத்தவீரர்களாக "பதிந்து" நாட்டின் சேனை போதுமான ஆட்களை கொண்டிருக்க செய்தது (காண்க 1 நாளாகமம் 7:40).

அதிகாரம் சார்ந்த பதிவுமுறையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முந்தைய காலங்களிலிருந்த முறை மாற்றப்பட்டுள்ளது. இன்றைய அமெரிக்காவின் இராணுவப் படைவீரர்கள் இப்பொழுது மனமுவந்து போய் சேருகிறார்கள். அதாவது இப்பொழுது கட்டாயமாக ஆள் சேர்ப்பு முறை இல்லை என்று பொருள். "மனமுவந்து சேருபவர்" ஒரு பலமான குடிப்படை, அது அதிகமாய் ஊக்கப்படுத்தப் பட்டவர்களும் மற்ற எந்த யுத்த வீரர்களையும் விட பராக்கிரம சாலிகளாய் இருப்பவர்களைக் கொண்டது. ஒவ்வொரு யுத்த வீரனும், மாலுமியும், விமானியும் கப்பல் படை வீரனும் சேவை செய்ய விருப்பமுள்ளவர்களாய் பணிபுரிகிறார்கள். தனது கடமையாற்றுவது சிரமமாக தெரிந்தும் அந்தப் பணியை செயலாற்ற விருப்பத்துடன், ஒவ்வொருவரும் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதைச் செய்கிறார்கள்.

*அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ராணுவப் படைகள் மிகவும் செயலூக்கமுள்ள யுத்தப்படை என்பதும் பூமியிலுள்ள மற்ற எந்தப் படையைக் காட்டிலும் வலிமையானது என்றும் அங்கீகரிக்கப் பட்டிருந்தாலும், அதைக் காட்டிலும் பலம் பொருந்தியதும் அதிக எண்ணிக்கையுடையதுமான ஒரு சேனை இராணுவம் உண்டு. நீங்கள் கிறிஸ்தவராக மாறிய பொழுது, நீங்கள் தேவனுடைய சேனையில் பதிவு செய்யப்பட்டீர்கள். கிறிஸ்தவர்கள் "பரலோகத்தில் பேரெழுதப்பட்டவர்கள்" என்று திருமறை சொல்லுகிறது (எபிரெயர் 12:23அ). இது புராதன இஸ்ரவேலின் கணக்கெடுப்புப்படி யுத்தவீரர்களாய் சேர்க்கப் பட்ட "பராக்கிரமசாலிகளை" பேரெழுதப்பட்டதற்கு ஒப்பானதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இருளை விட்டு ஒளியினிடத்துக்கு திரும்பினதால் கிறிஸ்தவர்கள் யுத்தப் படைக்குள் நுழைந்து விட்டனர். சுறுசுறுப்பான இயக்கத்தில் இராணுவ வீரர்கள் சேவைக்கென பேரெழுதப்படுவது போலவே, கிறிஸ்தவனும் ஒழுங்குமுறையில் சிட்சிக்கப்பட வேண்டும் (காண்க 2 தீமோத்தேயு 2:3, 4).*

*எபேசியர் 6:10-20 கர்த்தருடைய சேனையில் நமது சேவையைப் பற்றிய விவாதமாக இருக்கிறது. நீங்கள் இப்போது ஒரு கிறிஸ்தவனானபடியால், நீங்கள் இருளுக்கும் வெளிச்சத்துக்குமிடையிலான யுத்தத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளீர்கள் (யோவான் 3:19, 20). பூமியிலுள்ள ஒவ்வொருவரும் இந்த யுத்தத்தில் இருளின் சார்பு யுத்த வீரனாகவோ அல்லது வெளிச்சத்தின் சார்பு யுத்த வீரனாகவோ, பங்கேற்றுள்ளீர்கள். நீங்கள் கிறிஸ்தவனானபோது, நீங்கள் இருளின் படையை விட்டு கர்த்தருடைய சேனையாகிய வெளிச்சத்தின் படையில் பேரெழுதப்பட்டுவிட்டீர்கள். தேவனால் ஏவப்பட்ட வசனம் இந்த யுத்தத்தில் கர்த்தருடைய சேனையின் அங்கத்தினராய் யுத்தம் பண்ணும்படி நம்மை கேட்கிறது.*

## யுத்தம்

*எபேசியர் புத்தகம் முழுவதும், கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்த விளக்கத்தை தேவனுடைய ஏவப்பட்ட வார்த்தைகளால் பவுல் கொடுக்கிறார். அநேக உருவகங்களை பயன்படுத்தும் அவர், கிறிஸ்தவனை பின்வருமாறு உருவகப் படுத்துகிறார். கிறிஸ்தவன் ...*

- *கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கம் (1:22, 23).*
- *பாவ மரணத்திலிருந்து திரும்பி உயிர்த்தெழுந்து வாழ்பவன் (2:1-10).*
- *தேவனுடைய ஆலயத்தில் ஒரு நம்புதற்குரிய அங்கமாக இருக்கிறவன் (2:19-22).*
- *தேவனுடைய ஞானத்தை விளங்கப் பண்ணுகிறவன் (3:10).*
- *சபையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணிக்கிற ஒரு அமைப்பாயிருக்கிறவன் (4:16).*
- *புதிதாக்கப்பட்ட ஒரு திட்டத்தில் தேவனுடைய புது வடிவமைப்பைப் பெற்றவன் (4:17-32).*
- *கிறிஸ்துவின் மணவாட்டியில் ஒரு பகுதியாயிருக்கிறவன் (5:22-32).*

*6:10-20ல் கிறிஸ்தவ ஜீவியம் எப்படியிருக்கும் என்பதை ஒரு ஏவப்பட்ட*

உருவகம் விவரிப்பதைக் காண்கிறோம். இந்த கடைசி உருவகம் பொல்லாங்கான ஆவிகளோடு போராடும், யுத்த வீரர்களில் ஒருவனாக கிறிஸ்தவ ஜீவியம் ஒப்பிடப்படுகிறது (வசனம் 12). கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தொடர் போராட்டத்திலும் கடினமாக சண்டையிடுவதிலும் உட்படுத்தப் பட்டவர்கள் என்பதை ஆலோசனையாகச் சொல்லுகிறது. தேவனுடைய ஆசீர்வதிக்கப் பட்ட பிள்ளையாகிய நீங்கள், அவருடைய திட்டத்தில் ஒரு சிக்கல் மிகுந்த அங்கமாயிருந்து அவருடைய சபையை கட்டுவதில் உதவுபவர்; ஆனால் நீங்கள் கரடுமுரடான யுத்தத்தில் நீங்கள் ஒரு யுத்த வீரராயுமிருக்கிறீர்கள். (காண்க 2 கொரிந்தியர் 10:3; 1 தீமோத்தேயு 1:18, 19; 6:12.)

நீங்கள் ஆவிக்குரிய போராட்டத்தை சந்திக்க வேண்டியிருப்பதால் நீங்கள் அதற்கான ஆயத்தங்களை செய்ய வலியுறுத்தும் பொருட்டு உங்களை யுத்த வீரனாக உருவகப் படுத்திப் பேசுகிறது. கர்த்தருடைய யுத்த வீரனாக நீங்கள், சாத்தானின் படைகளை தோற்கடிக்கும்படி பயிற்றுவிக்கப் படக்கூடும். யுத்தவீரனின் வாழ்க்கை கஷ்டமானதும் கோரிக்கையுடையதுமாயிருக்கிறது. ஒரு பெலமுள்ள கிறிஸ்தவனாக இருக்க உங்களுக்கு எதிராக சாத்தானால் கொண்டுவரப்படும் சவால்களைச் சந்திக்க நீங்கள் ஆயத்தப்பட்டாக வேண்டும்.

## ஆயத்தம்

போர்ச் சேவகர்கள் யுத்தத்திற்கான பயிற்சியையும் ஆயத்தத்தையும் செய்ய வேண்டும். ஆயத்தமில்லாத போர்சேவகன் ஒருபோதும் தோல்வியேயன்றி - வெற்றியைக் காண முடியாது. ஆவிக்குரிய போராட்டத்திற்காக கர்த்தர் தமது படை வீரர்கள் ஆயத்தப்பட ஏதுவானவைகளைக் கொடுக்கிறார். 6:10-20ல், கிறிஸ்தவ போர்ச் சேவகனுக்கு தேவையான ஆயத்த உதவிகளை பவுல் வரிசைப்படுத்தி பட்டியலிட்டுக் காட்டுகிறார். நீங்கள் இப்பொழுது கர்த்தருடைய சேனையில் ஒருவர், எனவே உங்களை நீங்களே யுத்தம் செய்ய ஏதுவாக ஆயத்தப்படுத்தி கீழ்வரும் வழிகளில் பாவத்தை எதிர்த்து போராட பின்பற்றுங்கள்:

### தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றத் தீர்மானியுங்கள் (6:10, 11அ)

யுத்தம் நடக்கையில் கட்டளைகள் சரியாக பின்பற்றப்படவேண்டும். கட்டளைகளைப் பின்பற்றத்தவறும் யுத்தவீரர் பெரும்பாலும் யுத்தத்தில் மரிக்கிறார்கள், மற்றும் அவர்களுடைய கீழ்ப்படியாமை அந்த கூட்டத்திலுள்ள மற்றவர்களையும் ஆபத்துக்குள்ளாக்குகிறது. இதே உண்மைதான் கிறிஸ்தவ போர்சேவகர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. நீங்கள் தேவனுடைய கட்டளைக்கு உட்பட்டவர், எனவே அவர் கொடுக்கும் ஒவ்வொரு நேரடி கட்டளைக்கும் ஜாக்கிரதையாக கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படியத் தேவையான பெலன் கர்த்தருக்குள் இருக்கிறது (வசனம் 10; காண்க எபேசியர் 1:19-23), மேலும் அவருடனே கூட வாழும் நெருங்கிய நட்புறவு முறையில் மட்டுமே அதை அடைய முடியும்.

தேவனுடைய கட்டளைகளை பின்பற்ற, நீங்கள் "கர்த்தருக்குள் பலப்பட வேண்டும்." தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் நீங்கள் புறம்பே தரித்துக் கொள்வதற்கு முன் நீங்கள் உள்ளாக பலப்பட வேண்டியது அவசியம் (காண்க

*எபேசியர் 3:16). உள்ளான பலமாகிய தேவபக்தியின் ஒப்புக்கொடுத்தல் குறையுமானால், புறம்பே அணியும் ஆயுத வர்க்கங்கள் பிரயோஜன மற்றவை. நீங்கள் "அவருடைய வல்லமையிலும் ... பலப்படாவிட்டால்," ஆவிக்குரிய யுத்தத்தில் நீங்கள் சாவுக்கேதுவாக காயப்பட வேண்டியதுதான். நீங்கள் எவ்வளவாய் பெலம் பெற்றுள்ளீர்கள்? தேவனுக்கு உங்களின் அர்ப்பணிப்பு எவ்வளவு பலமுள்ளது? தேவனுடைய சத்தியத்தினால் நீங்கள் எவ்வளவாய் மனங்குத்தப்பட்டுள்ளீர்கள்?*

*அநேக கிறிஸ்தவர்கள் இந்த உள்ளான மனுஷனிலே பெலப்படாமல் தேவனுடைய ஆயுத வர்க்கங்களைத் தரித்துக் கொள்ள முற்படுகிறார்கள். உங்களுடைய உள்ளான மனுஷன் எவ்வளவு பலமுள்ளவன்? பவுலின் மனோபாவம் உங்களுக்கும் இருக்க வேண்டுமென அவர் சொல்லுகையில், "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதுப்பிக்கப் படுகிறது என்றார்" (2 கொரிந்தியர் 4:16).*

***உங்கள் பெலனை ஒருமுகப்படுத்துங்கள் (6:11ஆ-13)***

*தேவனுடைய சேனையில் போர்ச்சேவகனாயிருக்கிற நீங்கள், உங்களுக்கு ஒரு உச்சவரம்பு தோற்றமுண்டு: "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படிக்கு." பிசாசானவன் உங்களை சோதிக்க முற்பட்டு தேவனை விட்டுப் பிரிந்து மறுபடியும் பாவத்துக்குள் போகத் தூண்டுவான். நீங்கள் உங்கள் ஆற்றலை தேவனை நோக்கி நடத்தினால் உங்கள் தொழுகையின் ஒப்புக் கொடுத்தல் பலமாக வளரும். நீங்கள் பாவத்துக்கு திரும்ப ஏதுவாக பிசாசானவன் தந்திரமாக சோதிப்பான். உங்களுடைய பெலவீனம் எதிலே இருக்கிறதோ அதைக் குறிவைத்து அவன் தன் நுணுக்கமான திறனால் ஏற்ற முறையில் செயல்படுவான்.*

*"நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாய் நிற்கும் பொருட்டு" என்பது நீங்கள் தேவனுக்கு உங்களை ஒப்புக் கொடுத்திருப்பதையே குற்றப்படுத்தி சாத்தான் பேசுவான் என்பதை ஆலோசனையாக குறிப்பிடப் படுகிறது. உங்களுக்கு பாதுகாப்பாய் இருப்பவைகளில் ஊடுருவி அழித்துப் போட வகைதேடுகிறான். இந்த ஆவிக்குரிய திடீர் தாக்குதலை, நீங்கள் விரட்டியடித்து அவனுடைய தாக்குதல்களை முறியடிக்க வேண்டும். தேவனிடத்தில் கடமையுணர்வோடு நிலைத்திருந்து திடீர் தாக்குதலை முறியடிக்க ஆயத்தமாயிருப்பீர்களானால் உங்கள் பாதுகாப்பை எதினாலும் தவறிப்போகச் செய்ய பிசாசினால் முடியாது (காண்க சங்கீதம் 1; 19:14).*

*அநேக கிறிஸ்தவ போர்சேவகர்கள் ஆவிக்குரிய யுத்தத்தில் ஆபத்து மிக்கவர்களாய் மாறிவிடுகின்றனர். ஏனெனில் அவர்கள் தேவனுடைய சத்தியத்தைத் தியானம் பண்ணுவதில்லை (2 தீமோத்தேயு 1:15), அப்படிப்பட்ட ஆபத்துக்கள் (2 தீமோத்தேயு 2:17, 18), பிகெல்லு மற்றும் எர்மொகெனே ஆகியோரையும் உள்ளடக்கியது (2 தீமோத்தேயு 4:14, 15), மற்றும் தேமாவையும் குறிக்கும் (2 தீமோத்தேயு 4:10).*

### *கிறிஸ்தவ போர்ச்சேவகனைப் போல உடையணிந்து கொள் (6:14-17)*

*கிறிஸ்துவுக்கு பலம்சேர்க்கும் போர்ச்சேவகனாயிருக்க நீங்கள் தேவனுடைய "சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளவும்" எடுத்துக் கொள்ளவும் வேண்டும் (வசனங்கள் 11, 13). இங்கு பவுலின் வார்த்தைகள் கிறிஸ்தவர்களின் போராட்டத்தில் வேறு தெரிவு எதுவுமில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்தப் போராட்டத்தில் நீங்கள் பங்கேற்றுத்தான் ஆகவேண்டும். அதன் அவசரத்தை இந்த வசனப்பகுதி பிரதிபலிக்கிறது. உங்களுடைய உள்ளான பாதுகாப்பை ஆயத்தப்படுத்திய பிறகு, அதைப் பாதுகாக்கத் தக்கதான ஆயுதங்களைத் தரித்து கொள்ள வேண்டும்.*

*நமது வெளிப் பாதுகாப்புக்கான கருவிகளை தேவன் கொடுக்கிறார் என்பதை ஏவுதல் மூலமாக, பவுல் விவரிக்கிறார். இந்த கருவிகளெல்லாம் கிறிஸ்தவனின் இருதயத்தில் உண்டாயிருக்கும் மனவெழுச்சியை பெலப்படுத்தும்படி சேர்த்துக் கொடுக்கப் படுகிறது. தீமையை எதிர்த்து நிற்கும் யுத்தத்தில் நீங்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால், உங்களுடைய அன்றாட வாழ்க்கையே யுத்தக் களத்தில்தான். உங்களுடைய மனவெழுச்சிகளை அழித்துப் போட பிசாசானவனும் அவனுடைய அந்தகார வீரர்களும் முயற்சிப்பார்கள். பக்தியின் வேஷத்தை தரித்துக் கொள்ளச் சோதித்து, உதடுகளினால் பேசி உள்ளத்திலே அந்த விசுவாசம் இல்லாமல் செய்வான். முரண்பாடான வாழ்க்கையை வாழவும், அதினால் உங்கள் தனிப்பட்ட பெலவீனங்கள் நியாயப் படுத்தப்பட்டு சுயநலமாய் சேவை செய்யவும் உங்களை அவன் சோதிப்பான் என்பதில் சந்தேகமில்லை.*

*உங்கள் விசுவாசம் காக்கப் படவும் உங்கள் ஆவிக்குரிய வாழ்வு பாதுகாக்கப் படவும், நீங்கள் "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்து கொள்ள" வேண்டும். ஒவ்வொரு ஆயுதவர்க்கமும் எப்படி பாதுகாப்பை அளிக்கிறது என்பதையும் தவறோடு ஒத்துப்போகாத விசுவாசத்தில் எப்படி அது உங்களை நிற்க வைக்கிறது என்பதையும் கவனியுங்கள்.*

*சத்தியம் என்னும் கச்சை.* *ஒரு கச்சை அல்லது இடுப்பில் அணியும் "வார்" பவுலின் நாட்களில் உடை தளராமலிருக்க போர் வீரர்கள் இடுப்பிலே கட்டிக் கொள்வார்கள், அதினால் அவன் செயலுக்காக போரிட இடையூறாக இராது. அவனுடைய உடை முறையாகக் கட்டப்பட்டிருப்பதால் போர்வீரன் சுலபமாக நடமாட ஏதுவாக்கும். போரிட்டுக் கொண்டிருக்கும் போது அதே கச்சை பலனையும் ஒத்தாசையும் கொடுக்கும். இதிலே ஒரு யுக்தி என்னவெனில், இந்தச் கச்சை ஒரு யுத்தக் கருவியல்ல; மாறாக, முதலில் அணிய வேண்டிய ஒரு பொருள். இதினால் மற்ற உடைகள் எல்லாம் பாதுகாப்பாய் அணியவும் யுத்தக் கருவிகளை அணியவும் எளிதாயிருக்கும். இது ஒரு முக்கியமான கருத்து. கிறிஸ்தவன் தான் சத்தியத்தினால் பாதுகாப்பாய் இருப்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவன் ஆவிக்குரிய யுத்தத்தில் யுத்தத்திற்கான தேவனுடைய ஆயுத வர்க்கங்களைத் தரித்துக் கொள்ள முடியாது. தேவனுடைய சத்தியம் எல்லாவற்றையும் ஒன்றாகக் கட்டி தனது வேதத்தில் விசுவாசத்துடன் ஒப்புக் கொடுக்க உதவுகிறது. சத்தியத்துக்கு அர்ப்பணித்தல் நிலையாமையைத் தவிர்க்கிறது (எபேசியர் 4:14, 15) யுத்த நேரத்தில் தவறுகளுக்கு எதிரான ஆதாரமாக இருக்கும் (நீதிமொழிகள் 20:28; கலாத்தியர் 4:16).*

*"நீதியென்னும் மார்க்கவசம்."* *இந்த ஆயுதவர்க்கம் போர்வீரனின் முக்கிய*

அவயங்களில் சரீரத்தின் மேல் பகுதியை மூடுவதற்கு பயன்பாடுள்ளது. மார்க்கவசம் "நீதியை" அடையாளப் படுத்துகிறது. அது கிறிஸ்தவனின் தேவபக்திக்குரிய செயலைக் குறிப்பது. நீதியை நடப்பிக்காதவர்கள் (காண்க பிலிப்பியர் 1:11; தீத்து 2:11, 12) பாதுகாக்கப்பட மாட்டார்கள்; ஆகிலும் உங்கள் வாழ்க்கை நீதியினால் அடையாளப் படுத்தப் படுமேயாகில், நீங்கள் பாவத்துக்குப் பலியாக மாட்டீர்கள்.

*"சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை."* போர்சேவகன் அணியும் பாதரட்சை மற்றொரு முக்கியமான போராயுதத்துக்கான கருவி. சரியான பாதரட்சை இல்லாமல், யுத்தத்தில் அவன் போதியளவு இயங்கி யுத்தத்தை செய்யமுடியாது. ரோம போர்சேவகர்களுக்கு வழங்கப் பட்டிருந்த பாதரட்சைகளின் அடியில் குமிழ் வடிவிலான ஆணிகள் பெரும்பாலும் அடிக்கப் பட்டிருக்கும் அதினால் எப்படிப்பட்ட மண்ணின் மேலும் நிற்கத்தக்க ஸ்திரத் தன்மை இருந்தது. தேவனுடைய சேனையில் இருக்கும் போர்சேவகனும் "உறுதியாய் நிற்கத்" தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சுவிசேஷத்தை நன்கு அறிந்து கொண்டு ஒரு கிறிஸ்தவ போர் சேவகன் நிலைத்திருக்கும் போது, யுத்தமே நடந்தாலும் அதின் மத்தியில் உறுதியாகவும் நம்பிக்கையோடும் நிற்பான்.

*"விசுவாசம் என்னும் கேடகம்."* ரோம அரசின் போர்வீரன் தனது கையில் ஒரு பெரிய கேடகத்தை பிடித்துக் கொண்டு போவான், அதினால் எதிராளி எய்கிற "அக்கினியாஸ்திரங்களை" எல்லாம் அவித்துப் போட்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்வான். இந்த அஸ்திரங்கள் சிறியவைகளும், மூர்க்கதனமாய் எய்யும் ஈட்டிகள் அல்லது "கணைகள்" (KJV). அவைகள் மரணத்தை விளைவிக்கும் யுத்தக் கருவிகள், ஆனால் கேடயங்கள் ஏதோ கொஞ்சம் தீங்கு விளைவிக்கப்பட அம்புகள் அஸ்திரங்களின் தாக்குதலில் இடமளிக்கலாம். கிறிஸ்தவர்களான நீங்கள், சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, உங்கள் விசுவாசத்தையே அழிக்கக் கூடிய திறமைவாய்ந்த அபாயங்களை நீங்கள் சந்திக்கலாம். அவை உபதேசங்களைக் குறித்த கேள்விகள் எழும்பலாம். இரட்சிப்பைக் குறித்தும், தேவனுடைய அன்பு, இப்படி எண்ணிறைந்த கேள்விகள் எழுப்பலாம். அப்படிப்பட்ட கேள்விகள் உங்கள் சிந்தனைகளை அழிக்கும்; அவை உங்களுடைய கேடயத்தை ஊடுருவுமானால், அவை சந்தேகம் என்னும் அக்கினியால் திரமாக சந்தேகத்தை கிளப்பி உங்கள் விசுவாசத்தை அழித்துவிடும். சாத்தானுக்கு எதிரான உங்கள் யுத்தத்தில் நீங்கள் இந்த "விசுவாசமாகிய கேடயத்தை" கையில் எடுத்துக் கொண்டுபோய், சந்தேகம் எனும் அழிவுக்கு இடங்கொடாமலிருக்க வேண்டும். உங்களின் "விசுவாசமென்னும் கேடயத்தைக்" கொண்டு, தேவனிடத்தில் ஒரு பூரணப்பட்ட நம்பிக்கை அடைய வேண்டும். இந்த நம்பிக்கை, அதின் பலனாக, "பொல்லாங்கன் எய்யும் எல்லா அக்கினியஸ்திரங்களையும் அவித்து போடும்" (காண்க சங்கீதம் 3:3, 4; 33:20; 84:11). தேவன் மேல் கொண்டுள்ள நம்பிக்கை விசுவாசியை உயர்த்தும் (நீதிமொழிகள் 29:25).

*"இரட்சண்யம் என்னும் தலைச் சீரா."* புராதனகால யுத்த வீரர்கள் தலைக்கென அணிந்த கருவி அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுத்தது. தலைதான் வாழ்வின் மையமான, சிந்தனை மற்றும் தெரிவு செய்யும் பகுதி. தலை பாதுகாக்கப்படாமல் விடப்பட்டால், சடிதியிலே மரணம் ஏற்படும்.

*தேவசேனையிலுள்ள போர் வீரனான நீங்கள், உங்கள் சிந்தனைகளை பாதுகாக்க வேண்டும் (காண்க ரோமர் 8:6; 2 கொரிந்தியர் 10:5). உங்கள் சிந்தனைகள் அவருடைய சிந்தனைகளுக்கேற்றதாக இருக்க வேண்டும், உங்கள் எண்ணங்களை நல்லதும் சரியானதுமான காரியங்களிலே செலுத்த வேண்டும். உங்கள் சிந்தனைகள் தேவனை மையம் வைத்ததாக இருக்கிறபோது நீங்கள் சமாதானத்தைக் காண்பீர்கள். "மனதை விரயப் படுத்துவது ஒரு பயங்கரமான காரியம்" என்று தலைப்பிடப்பட்ட ஒரு தொலைக்காட்சி வெளியீடு, கல்வி கற்றலில் முன்னேற்றம் செய்யும் நோக்கில் ஒளிபரப்பப்பட்டது. சபையும் இந்தக் குறிக்கோளைப் பற்றிக் கொண்டு, "மனம் பாதுகாக்கப் படாமல் விடுவது ஒரு அபாயகரமான காரியம்!" என்று சொல்லலாம்.*

*"ஆவியின் பட்டயம்." கிறிஸ்தவன் கையில் கொண்டு செல்லும் ஒரே யுத்தக் கருவி தேவனுடைய பரிசுத்த வசனம். சாத்தானின் சோதனைகளை வெற்றி கொள்ள கிறிஸ்து இந்த ஆயுதத்தைத்தான் பயன்படுத்தினார் (காண்க மத்தேயு 4:4, 7, 10). சாத்தானை தோல்வியுறச் செய்ய வேறு துணைக்கருவிகள் தேவையில்லை. உண்மையில் பொல்லாங்களை எதிர்த்து செய்யும் இந்தப் போராட்டத்தில் மற்ற எந்த யுத்தத் துணைக் கருவியும் பயனற்றது. கிறிஸ்தவன் பிடித்திருக்கும் ஒரே யுத்தக்கருவி இந்தப் "பட்டயமாதலால்" (வசனங்களானதால்), அதை முறையாக கையாள பயிற்சிவிக்கப்பட வேண்டும். ஒரு யுத்தக் கருவியை முறையாக கையாள ஒருவர் அறியாதிருந்தால் அந்தக் கருவி எந்த வகையில், அவனைப் பாதுகாக்கவும் வெற்றி கொள்ளவும் செய்யும்? தேவ வசனத்தின் அறிவை நீங்கள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் அதினால் திறமையாக உங்கள் யுத்தக் கருவியை கையாள இயலும் (2 தீமோத்தேயு 2:15). வசனங்களை முறையாக பயன்படுத்துவதன் மூலம், சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் நீங்கள் வெற்றி கொள்வீர்கள் (சங்கீதம் 119:9, 11). தேவனுடைய வசனம் "ஜீவனும் வல்லமையும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் … இருக்கிறது" (எபிரெயர் 4:12). வேதவசன சத்தியங்கள் சாத்தானுக்கு எதிரான நமது யுத்தத்தில் வெற்றிகொள்ளச் செய்யும் பெலனுள்ளது.*

***உங்கள் தளபதியோடு தொடர்ந்து தொடர்பு கொள்ளுங்கள் (6:18-20)***

*பழங்கால யுத்தங்களிலே மிகப்பெரிய தடைகளில் ஒன்றாக இருந்தது தளபதிக்கும் போர்ச்சேவகர்களுக்கும் இடையேயிருந்த தொடர்பு குறைபாடுதான். இந்தப் பிரச்சனை இன்றைக்கும் நடக்கும் யுத்தங்களில் தொடருகிறது. தளபதிக்கும் போர் சேவகர்களுக்குமிடையே தொடர்பு தடைபடுமானால், ஆபத்தே அதன் விளைவு. கிறிஸ்தவனுக்கும் சாத்தானுக்கும் நடக்கும் யுத்தத்தில் இது நிச்சயமான உண்மை. நீங்கள் சாத்தானோடும் அவனுடைய பொல்லாங்கான யுத்த சேவகரோடும் போராடிக் கொண்டிருக்கையில், நீங்கள் தொடர்ந்து உங்களுடைய தளபதியுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். உங்கள் தொடர்பு சாதனம் பரலோகத்தின் பிதாவோடு ஜெபத்திலே பேசுவதுதான்.*

*கிரேக்க மொழியில், இந்த "ஜெபித்துக் கொண்டிருத்தல்" என்பது ஒரு தொடர் வினையாகக் குறிப்பிடப்படுகிறது. ஏவப்பட்ட செய்தி என்னவெனில், கிறிஸ்தவன் தரித்துக் கொள்ளும் ஒவ்வொரு ஆயுதவர்க்கமும், ஜெபத்தோடு அணிய வேண்டும். கிறிஸ்தவன் யுத்த வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டவுடன்,*

ஜெபம் தொடர வேண்டும். ஆவிக்குரிய யுத்தம் செய்வதில் ஜெபம் எவ்வளவு இன்றியமையாதது என்பது வலியுறுத்தப் படுகிறது.

போர்ச் சேவகன் தேவையான அனைத்து ஆயுதங்களையும் தரித்துக் கொண்டிருக்கலாம். ஒப்புக் கொடுத்த கடமை உணர்வையும் கொண்டிருக்கலாம்; ஆனால் அவன் தனது தளபதியுடனான தொடர்பில் குறைபாடு இருக்குமேயானால், தோல்விதான் அதன் விளைவு. ஜெபம் உறுதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது. ஒரு கிறிஸ்தவனாக நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்களில் ஒன்று ஜெபத்திலே தொடர்ந்து இருந்து உங்கள் ஆவிக்குரிய யுத்தத்திற்கு அது உதவிகரமாக இருக்கச் செய்யுங்கள். கிறிஸ்தவனுக்குத்தேவை ...

- எல்லாவற்றிற்காகவும் ("எப்பொழுதும்") தேவனோடு பேசுவதை ஜெப வாழ்க்கை உள்ளடக்கியது.
- ஜெப வாழ்க்கை தேவனுடைய சித்தத்தைத் தொடரும்படி செய்கிறது ("ஆவியிலே").
- ஜெப வாழ்க்கை ஜெபத்தில் எவைகளைச் சேர்த்துக் கொள்வது என்கிற விழிப்புணர்வை விளங்கப் பண்ணுகிறது ("எச்சரிக்கை").
- ஜெப வாழ்க்கை முடிவு பெறாதது ("எல்லாவித விடாமுயற்சி").
- ஜெப வாழ்க்கை தேவனுடைய திட்டத்துக்கு ஒத்துழைக்கிறது ("தைரியமாய் பேசுதல்").

உங்கள் ஜெபவாழ்க்கை விடாமுயற்ச்சியுடையதா? ''இடைவிடாமல் ஜெபிக்கிறீர்களா'' (1 தெசலோனிக்கேயர் 5:17)? உங்கள் பரலோகத்தின் பிதாவோடு தொடர்பு கொள்வதில் நிலைத்திருந்து சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் நீங்கள் வெற்றி பெற்றுக் கொண்டுள்ளீர்களா?

## வெற்றி

நீங்கள் கிறிஸ்தவனானபோது, உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய யுத்தத்துக்குள் நுழைந்து விட்டீர்கள். உங்கள் ஆத்துமாவின் முடிவு சாத்தானுக்கு எதிரான உங்கள் யுத்தத்தின் விளைவைப் பொறுத்து அமைந்துள்ளது. நீங்கள் இந்த யுத்தத்திற்கு உங்களை ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறீர்களா? யுத்தத்திற்குத் தேவையான ஆடைகளாக தேவன் அளித்துள்ளவைகளைத் தரித்துக் கொண்டுள்ளீர்களா? யுத்தத்தில் வெற்றி கொள்ள உதவும் பொருட்டு ஜெபத்தை பயன்படுத்துகிறீர்களா? சில கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய யுத்தத்தை கை விட்டுவிடவே துவங்குகின்றனர் (2 தீமோத்தேயு 4:10) அவர்கள் சாத்தானுக்கு சரணடைவதை, தேமா இப்பிரபஞ்சத்துக்கு திரும்பிப் போனதை உதாரணமாகக் கொண்டு விளக்கப்படுத்துகிறது (காண்க கலாத்தியர் 6:9). கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் சாத்தானால் சிறையாக்கப் படாமலும் பெரிய ஆவிக்குரிய யுத்தத்தில் கொல்லப்படாமலும் இருக்கத்தன்னை தீர்மானித்துக் கொள்ள வேண்டும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:10).

இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவன், "நல்ல விசுவாசப் போராட்டத்தைப் போராடுங்கள்"! (1 தீமோத்தேயு 6:12).